Australian Government
Department of Home Affairs

# சர்வதேச மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள்

மாணவர் (துணைப்பிரிவு 500) விசா வைத்திருப்பவர்களுக்கான தகவல்

## விசா விண்ணப்பக் கட்டணம் திரும்பப்பெறுதல்

19 ஜனவரி 2022 முதல் 19 மார்ச் 2022 வரை அவுஸ்திரேலியாவிற்கு வருகை தரும் மாணவர் விசா வைத்திருப்பவர்கள் விசா விண்ணப்பக் கட்டணத்தைத் திரும்பப் பெறத் தகுதியுடையவர்களாக இருக்கலாம். மேலதிகத் தகவலுக்கு, பணத்தைத் திரும்பப் பெறுதல் என்பதைப் பார்வையிடவும்.

## அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறுதல்

நீங்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறி, மீண்டும் நுழையத் திட்டமிட்டால், புறப்படுவதற்கு முன் நீங்கள் இணங்கி நடக்க வேண்டிய விதிமுறைகளைச் சரிபார்க்கவும்.

## அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பிச் செல்லுதல்

நீங்கள் கோவிட்-19 காரணமாக அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறி, உங்கள் படிப்பைத் தொடரத் திரும்பி வர விரும்பினால், நீங்கள் பிரிட்ஜிங் (இணைப்பு) விசா A-க்கு தகுதி பெறலாம்.

பின்வரும் விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்தால், நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பிய பிறகு பிரிட்ஜிங் (இணைப்பு) விசா A-க்கு விண்ணப்பிக்கலாம்:

- செல்லுபடியாகும் மாணவர் விசாவை வைத்திருப்பவர்
- கோவிட்-19 இன் தாக்கங்கள் காரணமாக உங்கள் படிப்பை முடிப்பதற்கு முன்பு அசல் விசா செல்லுபடியாகும் காலத்திற்குள் உங்கள் விசா காலாவதியாகிவிடும்

- உங்கள் தற்போதைய மாணவர் விசாவில் முன்பு அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்தவர்
- ஆஃப்சோரில் விண்ணப்பித்து, முடிவு நிலுவையில் உள்ள புதிய மாணவர் விசா விண்ணப்பதாரர்

நீங்கள் அவுஸ்திரேலியாவில் ImmiAccount -ல் உள்நுழைந்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.